00407

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025

இறுதிப் பரீட்சை - 2025

மட்டம் - 08

**STP8301/STP8501/ESP2201 – கல்வி உளவியல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 26.04.2025 நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. கல்வி உளவியல் எனும் எண்ணக்கருவினை ஏற்றுக் கொள்ளப்பட்ட **இரண்டு** (02) வரைவிலக்கணங்களின் துணையுடன் விளக்குக.

2. பிள்ளை ஆய்வு முறைகளில் பரிசோதனைசாரா ஆய்வுமுறை ஒன்றினை குறிப்பிட்டு அதன் பலங்கள் மற்றும் பலவீனங்களைச் சுருக்கமாக விளக்குக.

3. “ஒரு தனியாளிடத்தில் ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் ஏற்படும் சாதகமான விருத்தியானது ஏனைய சகல அம்சங்களினதும் சாதகமான விருத்தியில் தாக்கம் செலுத்தும்”. இக்கூற்றினை உதாரணமொன்றின் துணையுடன் நியாயப்படுத்துக.

4. பிள்ளைப் பருவத்தைச் சேர்ந்த பிள்ளையொன்றின் அறிவுசார் விருத்திக்கு வசதிப்படுத்துவதில் ஆரம்பப்பிரிவு ஆசிரியரது வகிபாகத்தினை **இரண்டு** (02) உதாரணங்களினை முன்வைத்து விளக்குக.

5. பண்டூராவின் அவதானக் கற்றல் கோட்பாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள தத்துவங்களை வகுப்பறையில் பிரயோகிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் உபாயங்கள் **இரண்டினை** (02) விளக்குக.

6. பியாஜேயின் அறிகை விருத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் சிரேஷ்ட இடைநிலை தரங்களில் அதன் கல்வி ரீதியான தாக்கங்கள் **இரண்டினைச்** (02) சுருக்கமாக விபரிக்குக.

7. மாஸ்லோவின் தேவை அடுக்கவமைப்புக் கோட்பாட்டின் தத்துவங்களை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது மாணவர்களை ஊக்குவிப்பதில் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்ட வகையில் ஆசிரியருடைய வகிபங்கினை **இரண்டு** (02) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

8. பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்வதற்கு ஒரு பாடசாலை பங்களிப்புச் செய்யக்கூடிய **இரண்டு** (02) வழிமுறைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

**9. I.** "பரம்பரை மற்றும் சூழல் ஆகிய இரண்டு காரணிகளும் பிள்ளை விருத்தியில் தாக்கம் செலுத்துகின்றன." உதாரணமொன்றின் துணையுடன் இக்கூற்றினை நியாயப்படுத்துக.

**(04 புள்ளிகள்)**

**II.** பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்தியில் தாக்கம் செலுத்தும் **இரண்டு (02)** காரணிகளை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**III.** பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்தியில் பெற்றோர்களினதும் பாடசாலையினதும் வகிபாகங்களை, ஒவ்வொன்றுக்கும் **இரண்டு (02)** பொருத்தமான உதாரணங்களை முன்வைத்துக் கலந்துரையாடுக.

**(12 புள்ளிகள்)**

**10. I.** மாணவர்களை கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தினை **இரண்டு (02)** உதாரணத்தின் துணையுடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

**II.** ஊக்குவிப்பு தொடர்பான மானுடத்துவ அணுகுமுறையின் ஏதோனும் தத்துவங்களைப் பற்றி விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**III.** கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது மாணவர்களை ஊக்குவிப்பதற்காக, மேலே குறிப்பிடப்பட்ட மானுடத்துவ அணுகுமுறையின் தத்துவங்களை ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தக்கூடிய **மூன்று (03)** வழிமுறைகள் பற்றி கலந்துரையாடுக.

**(12 புள்ளிகள்)**

**11. I.** கற்றலில் பல்வகைமை சார் தேவைகள் கொண்ட மாணவர்களை உள்வாங்கிக் கொள்ளும் போது ஆசிரியர் ஒருவர் கவனத்தில் கொள்ள வேண்டிய **இரண்டு (02)** காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**II.** கற்றலில் பல்வகைமைசார் தேவைகள் கொண்ட பிள்ளைகளை கற்றலில் உள்வாங்கிக் கொள்ளும் போது ஹாவார்ட் காட்னர் முன்வைத்துள்ள பல்நுண்மதிக் கோட்பாட்டின் தத்துவங்கள் பற்றிய அறிவு எவ்வாறு ஆசிரியர் ஒருவருக்கு முக்கியமானதாக அமையும் என்பதற்கான **இரண்டு (02)** அம்சங்களைக் குறிப்பிட்டு கலந்துரையாடுக.

**(04 புள்ளிகள்)**

**III.** நீங்கள் கற்பிக்கும் பாடத்தில் பாடமொன்றினை தெரிவு செய்து, கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது கற்றலில் பல்வகைமைக் கொண்ட தேவைகள் கொண்ட மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் **நான்கு (04)** பற்றிக் கலந்துரையாடுக.

**(12 புள்ளிகள்)**

**12. I.** "மாணவர்களின் கற்றலுக்கு வசதி செய்வதற்காக ஆசிரியர் ஒருவர் வேறுபட்ட கற்றல் கோட்பாடுகள் பற்றி ஆழமான விளக்கத்தினை கொண்டிருத்தல் வேண்டும்." **இரண்டு (02)** உதாரணங்களின் துணையுடன் இக்கூற்றினை நியாயப்படுத்துக.

**(04 புள்ளிகள்)**

**II.** மாணவர்களின் கற்றலுக்கு விளக்கமளிப்பதில் அறிகைசார் கற்றல் கோட்பாடுகள் மற்றும் கட்டுருவாக்கக் கற்றல் கோட்பாடுகள் ஆகியவற்றுக்கிடையிலான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் பற்றி கலந்துரையாடுக.

**(04 புள்ளிகள்)**

**III.** இடைநிலை பாடசாலைகளைச் சேர்ந்த பிள்ளைகளின் அறிகை விருத்திக்கு வசதி செய்வதற்காக, கற்றல் தொடர்பான கட்டுருவாக்க நோக்குகளுக்கு அமைவாக ஆசிரியர் ஒருவர் பின்பற்றக் கூடிய **நான்கு (04)** உபாயங்களை பரிசீலனை செய்க.

**(12 புள்ளிகள்)**

**13. I.** பிள்ளைப்பருவம் மற்றும் கட்டிளமைப் பருவத்தினருக்கிடையிலான அறிகை விருத்திப் பண்புகளில் காணப்படும் வேறுபாடுகள் **இரண்டினை (02)** விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**II.** இலங்கை சூழமைவில் கட்டிளமைப்பருவத்தினர் முகங்கொடுக்கும் **இரண்டு (02)** இடர்பாடுகளை பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக.

**(04 புள்ளிகள்)**

**III.** உங்களுடைய பாடசாலையைச் சேர்ந்த கட்டிளமைப்பருவத்தினர், மேலே குறிப்பிட்ட இடர்பாடுகளுக்கு, முகங்கொடுப்பதற்கு நீங்கள் எவ்வாறு வசதி செய்வீர்கள் என்பது பற்றிக் கலந்துரையாடுக.

**(12 புள்ளிகள்)**

**14. I.** ஆசிரியர் ஒருவருக்கு ஆளுமை விருத்தி பற்றிய அறிவு ஏன் முக்கியத்துவம் உடையதாக அமைகின்றதென **இரண்டு (02)** உதாரணங்களைக் குறிப்பிட்டு கலந்துரையாடுக.

**(04 புள்ளிகள்)**

**II.** கார்ள் ஜீங் முன்வைத்துள்ள ஆளுமை விருத்தியுடன் தொடர்புபட்ட கருத்துக்களை பகுப்பாய்வு செய்க.

**(04 புள்ளிகள்)**

**III.** மாணவர்களிடத்தில் சிறந்த பொருத்தப்பாடுடைய ஆளுமையை விருத்தி செய்வதற்கு ஒரு ஆசிரியர் பின்பற்றக் கூடிய **மூன்று (03)** உபாயங்களைப் பற்றி விபரிக்குக.

**(12 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -